# இணைப்பு - 1.1

## மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க பரிந்துரை செய்ய உயர்மட்டக் குழு அமைத்து வெளியிடப்பட்ட அரசு ஆணை.

(அரசு ஆணை (நிலை)எண்.320 ஊரக வளர்ச்சி(சி1) துறை, நாள் 11.11.1997)

சுருக்கம்

ஊராட்சிகள் - மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை வழங்க வழிவகைகளை ஆராய குழு அமைக்கப்பட்டது - மேலும் இருவரை உறுப்பினர்களாக குழுவில் சேர்த்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆணை:-

இந்திய அரசியலமைப்பின் 73வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தேர்தல் நடைபெற்று பிரதிநிதிகள் பதவி ஏற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுக்கூறு 243ஜி மற்றும் 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிசகள்ள சட்டத்தின் பிரிவு 257-க்கிணங்க பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களை தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994ஆம் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் IVல் உள்ள இனங்களை செயல்படுத்தவும் தேவையான பொறுப்புக்களை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்த ஆலோசனை கூறுமாறு மாநில திட்டக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வாறே மாநில திட்டக்குழு தனது இரண்டு அறிக்கைகளில் பல இனங்களின் மீது அரசுக்கு அறிக்கைகளை அனுப்பியது. இவ்வறிக்கைகளை பிற துறைகளுடன் கலந்து ஆராய்ந்து அரசு பல ஆணைகளை பிறப்பித்துள்ளது. இன்னும் சில ஆணைகள் பிறப்பிக்கப்படவுள்ளது. தற்பொழுது, மாநில திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மாவட்ட ஊராட்சி , ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளுக்கு இதுவரை வழங்கியுள்ள அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பல்வேறு திட்டங்களை கண்காணிக்கும் பணிகள் ஆகியவற்றை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு செய்து மேலும் எத்தகைய மாற்றங்களை செய்யலாம், எத்தகைய உரிமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் அளிக்கலாம் என்பது பற்றி பரிந்துரை செய்ய சட்டப்பேரவையில் உள்ள கட்சிப் பிரதிநிதிகளை அமைச்சர் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அவர்களை அமைப்பாளராகக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் இக்குழுவில் ஆளுங்கட்சி சார்பிலும், பிராதான எதிர்கட்சி சார்பிலும் முறையே இரண்டு உறுப்பினர்களும் மற்ற கட்சிகளின் சார்பில் ஒவ்வொரு உறுப்பினரும் நியமிக்கப்படுவர் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

2. அதன் அடிப்படையில் கீழ்க்கண்டவர்களைக் கொண்ட குழுவை அமைக்க அரசால் ஆணைகல் பிறப்பிக்கப்படுகின்றது:-

| | |
|---|---|
| 1. மாண்புமிகு திரு.கோ.சி.மணி, அமைச்சர்<br>ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை | அமைப்பாளர் |
| 2. திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர், தி.மு.க. | உறுப்பினர் |
| 3.திரு.பரமத்தி சண்முகம், கரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் | உறுப்பினர் |
| 4.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர், த.மா.கா. | உறுப்பினர் |
| 5.திரு.என்.ஆர்.அழகராஜா, சட்டமன்ற உறுப்பினர், த.மா.கா. | உறுப்பினர் |
| 6.திரு.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர், இ.தே.லீக் | உறுப்பினர் |
| 7.திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர் அ.இ.அ.தி.மு.க. | உறுப்பினர் |
| 8.திரு.இராசேந்திரன் (எ) தீரன், சட்டமன்ற உறுப்பினர், பா.ம.க. | உறுப்பினர் |
| 9.திரு.இலா.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர், அ.இ.பா.பிளாக் | உறுப்பினர் |
| 10.திரு.ஜி.இராமகிருஷ்ணன், பி.ஏ.பி.எல்.,<br>மாநில செயற்குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்கிஸ்ட்) | உறுப்பினர் |

11.திரு.ஏ.எம்.கோபு,
மாநில செயற்குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி — உறுப்பினர்

12.திரு.பி.அய்யாக்கண்ணு, தலைவர், திருச்சி புறநகர மாவட்ட ஜனதாதளம், உறுப்பினர்
13.டாக்டர் வா.மைத்ரேயன், மாநில பொது செயலாளர், பாரதிய ஜனதா கட்சி, உறுப்பினர்

3. மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளுக்கு இதுவரை வழங்கியுள்ள அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பல்வேறு திட்டங்களை கண்காணிக்கும் பணிகள் ஆகியவற்றை ஆய்வு செய்து மேலும் எத்தகைய மாற்றங்களைச் செய்யலாம் மற்றும் எத்தகைய உரிமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் அளிக்கலாம் என்பது பற்றியும் அரசுக்கு பரிந்துரை செய்தல் இக்குழுவின் ஆய்வு வரம்புகளாகும்.

4. இக்குழு ஒரு முதல் நிலைக் குழுவாக இருக்கும். தனது அறிக்கையினை ஆறு மாத காலத்துக்குள் அரசுக்கு அளிக்கும்படி இக்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலுடன் பிறப்பிக்கப்படுகிறது.
(அ.சா.கு.எண்.5370/நி.செ./P/97 நாள் 3.11.1997)

(ஆளுநரின் ஆணைப்படி)

இரமேஷ் சந்திர பண்டா,
அரசுச் செயலாளர்.